இனிமையான குழந்தைகளே! ஞானக்கடல் பாபாவிடமிருந்து ஆஸ்தியைப் பெறவேண்டும் என்றால் 20 நகங்களுக்கும் சக்தி கொடுத்து அதாவது முழுமையான முயற்சி செய்து படிப்பை அவசியம் படிக்க வேண்டும். படிப்பின் மூலமாகத்தான் இராஜ்யம் அல்லது ஜீவன் முக்தி பதவி பிராப்தியாகும்

கேள்வி: ஞான மார்க்கத்தில் யார் நிரந்தரமாக இருக்க முடியும்? உயர்ந்த பதவிக்கு ஆதாரம் என்ன?

பதில்: யாருக்கு படிப்பைத் தவிர வேறு எதிலும் ஆர்வமில்லையோ, ஞானத்தில் பரிபக்குவ (முதிர்ந்த அனுபவம் உள்ள) நிலையில் உள்ளவர்களோ, அப்படிப்பட்டவர்கள் தான் ஞான மார்க்கத்தில் நிலை யாக இருக்க முடியும். மற்றபடி காட்சிகளைப் பார்ப்பத்தில் ஆசை வைப்பது, விளையாடுவது, இவை களால் நன்மை எதுவுமில்லை, மேலும் மாயை பிரவேசம் ஆகின்றது. பிறகு பாபா கையை அல்லது படிப்பை விட்டுவிடுகின்றார்கள். உயர்ந்த பதவிக்கு படிப்பின் மீது முழுமையான கவனம் செலுத்த வேண்டும்.

பாடல்: நீங்கள் தான் தாய்,.....

ஓம் சாந்தி என்பதன் பொருள் குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். யாரெல்லாம் தர்ம சிந்தனை யுள்ளவர்கள், தர்ம புருஷர்கள், கோவில்களுக்கு செல்லக்கூடியவர்கள் அனைவரும் வாய் மூலமாக ஓம் சாந்தி என்ற வார்த்தையைக் கூறுவார்கள். ஆனால் பொருள் என்ன என்பது தெரியாது. நாமும் ஓம் சாந்தி என்று கூறுகின்றோம். நான் ஆத்மா, ஆத்மா என்ற வார்த்தை அவசியம் வருகின்றது. பரமாத்மா மற்றும் ஆத்மா கூறுகின்றது ஓம் சாந்தி. நான் ஆத்மா எனது சுயதர்மம் சாந்தி. ஆத்மா தனது காரியத்தைக் கூறுகின்றது. பாபாவும் கூறுகின்றார் ஓம் சாந்தி. நானும் ஆத்மா, ஆனால் என்னை பரமாத்மா என்று கூறுகின்றார்கள். ஏனென்றால் நான் சதா பரந்தாமத்தில் வசிக் கின்றேன். நான் பிறப்பு, இறப்பில் வருவதில்லை. பாபா நேரில் வந்து கூறுகின்றார், நீங்கள் மறுபிறப்பில் வருகின்றீர் கள். நீங்கள் சரீரம் உள்ளவர்கள். சூட்சும வதனத்தில் உள்ளவர்கள் கூட சூட்சும தேகதாரி. இவைகளிலிருந்து நான் விடுபட்டு இருக்கின்றேன். எனக்கு எந்த ஸ்தூலமான சரீரமும் இல்லை. சூட்சுமமான சரீரம் உள்ளவர்களை பிரம்மா, விஷ்ணு, சங்கர் என்று அழைக்கப் படுகிறது. சரீரத்திற்குத் தான் பெயர் வைக்கப்படுகிறது. ஆத்மாவிற்கு இல்லை. ஆத்மா உடலை ஆதாரம் எடுத்த பிறகு, உடலுக்குப் பெயர் வைக்கின்றார்கள். ஒருவர் இறந்து விடும்போது இன்னார் சரீரத்தை துறந்து விட்டார் என சொல்லப் படுகிறது. சரீரத்திற்கு பெயர் வைக்கப்படுகிறது பிறகு வேறு சரீரம் எடுக்கிறது. பரமபிதா பரமாத்மா விற்கு அவ்வாறு சொல்வதில்லை. அனைவருக்கும் சரீரத்திற்குப் பெயர் வைக்கப்படுகிறது. குழந்தை களாகிய நீங்கள் என்னுடையவர்களாக ஆகிய பின்னர், வேறு பெயர் வைக்கின்றேன். எவ்வாறு குருமார்கள் பெயர் வைக்கின்றார்கள். இன்றைய காலத்தில் கன்னியர்கள் திருமணம் செய்து கொண்டபின் பெயர் மாற்றுகின்றார்கள். ஆண்களுக்கு பெயர் மாற்றுவதில்லை. ஆண்கள் தனது பெயரில் தொழில்களை செய் கின்றார்கள். தாய்மார்கள் தொழில் ஏதும் செய்வதில்லை ஆகவே அவர்கள் பெயர் மாற்ற முடியும். இன்சூரன்ஸில் ஆண்கள் பெயர்கள் இருக்கும். இப்போது பாபா புரிய வைக்கின்றார், அனைவரும் நினைவு செய்கின்றார்கள். நீங்கள் தான் தாய்,

தந்தை, நண்பன், படகோட்டி. நீங்கள் எங்களை கூடவே அழைத்துச் செல்கின்றீர்கள். எத்தனை சம்மந்தங்களில் வருகின்றார். உடலை விட்டுவிட்டு பின்னர் உங்களுடன் செல்ல வேண்டும். படிகோட்டியாக நம்மை உடன் அழைத்துச் செல்கிறார் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். தந்தைக்கு எவ்வளவு மகிமை. பின்பு எப்போது வருவார்? எப்போது வந்து துணையாக இருப்பார்? இதைப் பற்றி தெரியாது. எப்போது பக்திமார்க்கம் முடிவடைகின்றதோ, அப்போது பக்தர்களை பாதுகாக்க நான் வரவேண்டும். நான் படகோட்டியாக ஆகி திரும்பி அழைத்துச் செல்கின்றேன். உங்களுக்குத் தெரியும் எவ்வாறு வந்து தாய், தந்தையாக ஆகின்றார். இவரைத்தான் படகோட்டி, குரு என்று கூறுப்படுகின்றது. சீ சீயான உலகம், ஜீவன் பந்தனத்திலிருந்து ஜீவன் முக்திக்கு அழைத்துச் செல்கிறார். எனவே தான் அவரை பதீத பாவனர் படகோட்டி என்று அழைக்கின்றனர். சத்தியயுகம் என்று புதிய உலகத்திற்கு கூறப்படுகின்றது. இதே உலகம் தான் இருக்கும். பழைய உலகம் அழிந்துவிடும். எவ்வாறு பழைய வீட்டில் வசித்து கொண்டே புதியதைக் கட்டுவார்களோ அதுபோல, பிறகு பழைய வீட்டை விட்டுவிடுவார்கள். இங்கு கூட ஸ்தாபனை காரியம் முடிந்தவுடன், பிறகு பழைய உலகம் அழிந்துவிடும். திருமூர்த்தி என்பதன் பொருளைப் புரிய வைக்கின்றார். பிரம்மா மூலமாக சொர்க்கத்தினை ஸ்தாபனை செய்வது. இது பரமபிதா பரமாத்மாவின் காரியம். இவர் மூலமாக செய்விக்கின்றார். செய்பவர், செய்விப்பவர், பாபா வந்து நேரில் புரிய வைக்கின்றார். பிரம்மா மூலமாக சகஜமான இராஜயோகம் மற்றும் ஞானம், பிரம்மா முகவம்சாவளியான உங்களுக்குப் புரிய வைக்கின்றார். எதிர்காலத்தில் 21 பிறவிகளுக்கு முயற்சிக்கேற்றப்படி தேவி தேவதா பதவியை அடைகின்றீர்கள்.

உங்களுக்குத் தெரியும் நாம் தாய், தந்தையிடமிருந்து படித்துக் கொண்டிருக்கின்றோம். இது ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயம். யார் படிப்பை விட்டுவிடுகின்றார்களோ, அவர்களுக்கு அதிர்ஷ்ட மில்லை. பள்ளிக்கூடம் என்பது நடந்து கொண்டேயிருக்கும். பாபா வந்து பிரம்மா மூலமாக பாடம் கற்றுத் தருகின்றார். குழந்தைகள் எங்கே இருந்தாலும், எந்த கிளை நிலையத்தில் இருந்தாலும், ஞானக்கடல் பரமபிதா பரமாத்மாவிடமிருந்து ஜீவன் முக்தி நமக்கு கிடைக்கின்றது. அதாவது இராஜ்யத்தின் ஆஸ்தியை அடைகின்றோம். படிப்பை விட்டு விட்டால் இராஜ்யத்தின் ஆஸ்தியை அடைய முடியாது. பாபா வந்திருப்பது கூடவே அழைத்துச் செல்வதற்கு, புதிய உலகம் ஸ்தாபனை ஆகிய பின்னர் அனைவரையும் படகோட்டி அழைத்துச் செல்வார். நீங்கள் பட கோட்டியை அறிந்துள்ளீர்கள். பின்பு யார் மூலமாக ஸ்தாபனை, வினாசம், பாலனை செய்விக்கின்றார் என்பதை யும் அறிந்துள்ளீர்கள். பின்பு படிப்பின் மூலமாக லட்சுமி, நாராயணன் ஆகி இராஜ்யம் செய்கின்றீர்கள் என்பதையும் அறிந்துள்ளீர்கள். நாம் படிப்பின் மூலமாக இராஜ்ய பதவியை அடைகின்றோம். யார் எந்தளவு படிக்கின்றார்களோ அதற்கேற்ப பதவி அடைகின்றார்கள். படிப்பு படிக்கவில்லை என்றால் பதவியை கெடுத்துக் கொள்கின்றார்கள். இது இராஜயோக படிப்பு. அநேக குழந்தைகள் படிப்பை படித்து, படித்து களைப்பு அடைந்து விடுகின்றார்கள். படிப்பு படிக்கவில்லை என்றால் களைத்து விடுகின்றார்கள் என்பதாகும். போதும் இனிமேல் என்னால் படிக்க முடியாது என்று கூறுகிறார்கள். இந்த படிப்பில் செலவுக்கான பேச்சேயில்லை. அந்த படிப்பை படிப்பதற்காக ஏழைகள் பணம் செலவு செய்ய

முடியாது. ஆகவே படிப்பை விட்டுகின்றார்கள். ஆனால் யாருக்கு படிப்பில் மிகவும் ஆர்வம் உள்ளதோ, அவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவிக்கின்றார்கள். நாங்கள் படிக்க விரும்பு கின்றோம். ஆனால் பணவசதியில்லை என்று. அவர்களுக்கு அரசாங்கம் பணம் கொடுக்கின்றது. எப்படியாவது படிக்க வேண்டும் என்று கெஞ்சி கேட்கின்றார்கள். எங்கள் தந்தையிடம் பணவசதியில்லை, எங்களுக்கு உதவி செய்யுங்கள். அரசாங்கத்திடம் பணவசதியில்லை, ஆதலால் மறுத்து விடுகின்றார்கள். நாங்கள் அவசியம் படிக்க வேண்டும் என்ன செய்வது? பிறகு செல்வந்தர்களிடம், தானம் செய்யும் மனிதர்களிடம் செல்கின்றார்கள்? தர்ம சிந்தனை உள்ளவர்கள் உதவி செய்வார்கள். அவ்வாறு கன்னியர்கள் கேட்க முடியாது. ஆண்கள் கேட்கலாம். படிப்பின் மூலமாக நன்றாக சம்பாத்தியம் செய் கின்றார்கள். இங்கு படிப்பு மற்றும் வியாபரம். பாபா வியாபாரி, ரத்தின வியாபாரி மேலும் ஞானக்கடலாக உள்ளார்.

தாய், தந்தை எல்லையற்ற ஞானக்கடல் என்று கூறுகின்றார்கள். நான் கல்பத்திற்கு முன்பு போல் உங்களுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுத்து இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்குகின்றேன். அனைத்து ஞானக் கருத்துகளை குறித்துக் கொள்ள வேண்டும். வாலிப வயதில் நன்றாக தாரணை செய்ய முடியும். அனைவற்றிற்கும் ஆதாரம் புத்தி. சிலர் சதோபிரதான், சிலர் சதோ, சிலர் ரஜோ, தமோ புத்தியாக உள்ளார்கள். அந்த பள்ளியில் கூட மாணவர் ஒருவருடைய புத்தி எப்படி என்று தெரிந்து கொள்கின்றனர். சதோபிரதானமான புத்தியுள்ளவர்கள் முழுமையான மதிப்பினை அடைவார்கள். அவர்களைத்தான் தலைவராக நியமிப்பார்கள். அவர்களுக்கு உதவி தொகைக் கூட கிடைக்கின்றது. இது எல்லையற்ற பள்ளி. இவற்றில் சதோ, ரஜோ, தமோ புத்தி உள்ளது. இங்கு பதவி என்பது ஒன்று தான். இது இராஜயோகம். ஒரே ஈஸ்வரிய படிப்பு. நான் குழந்தைகள் அனைவருக்கும் இராஜயோகத் தினைக் கற்றுத்தருகின்றேன் என்று பாபா கூறுகின்றார். யார் எந்தளவு முயற்சி செய்கின்றார்களோ அந்தளவு பதவி கிடைக்கும். உயர்ந்த பதவி என்னவென்று புரிந்து கொண்டீர்கள். வரிசைப் படியாக பதவியை அடைகின்றார்கள். அனைவர் மீதும் பாபாவிற்கு அன்பு உள்ளது. அனைவரையும் மாயையின் சங்கிலியிலிருந்து விடுதலை செய்ய வந்துள்ளார். இம்மாதிரியாக வேறு யாரும் கூற முடியாது. கல்ப கல்பமாக இராஜயோகம் கற்றுத் தருகின்றேன். பாபா தான் கூறுகின்றார் கல்ப கல்பமாக சங்கமயுகத்தில் வருகின்றேன். மனிதர்கள் யுகம், யுகம் என்று கூறிவிட்டார்கள். எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டார்கள். பாபா கூறுகின்றார், நான் பதீதபாவனன். நான் வருவதே உங்களை பாவனமாக (தூய்மையாக) ஆக்குவதற்கு, கலியுகத்தின் முடிவு மற்றும் சத்தியயுகத்தின் ஆரம்பம் சங்கமயுகம். இச்சமயம் பாபா வருகின்றார், ஆதலால் நன்றாகப் படிக்க வேண்டும். அழிவு என்பது ஏற்பட்டே தீரும். 20 நகங்களுக்கும் சக்திக் கொடுத்து தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும். படிப்பை விட்டு விடக்கூடாது. யார் படிப்பினை விட்டுவிடுகின்றார்களோ, அவர்கள் தேர்ச்சி அடைய மாட்டார்கள். கீழே விழுந்து விடுகின்றார்கள். குழந்தைகளுக்கு எச்சரிக்கை கொடுக்கப்படுகின்றது. எந்தவிதமான காமம், கோபம், பேராசை, மோகம் என்ற பூதமும் வரக்கூடாது. நான் லட்சுமியை மணம் செய்து கொள்ள தகுதியாக உள்ளேனா என்று உள்ளம் என்ற கண்ணாடியில் பார்க்க வேண்டும். நாரதரின் உதாரணம் கூறப்பட்டிருக்கின்றது. நீங்கள் அனைவரும் பக்தர்கள் தானே. பக்தி

மார்க்கத்தில் நாரதரை ஆண்களில் மகிமை செய்கின்றார்கள். மேலும் பெண்களில் மீரா. அது பக்தி மார்க்கம். ஞான மார்க்கத்தில் மம்மா, பாபாவிற்கு புகழ் உண்டு. பின்னர் வெற்றிமாலை. யார் சுகத்தினைத் தருகின்றார் களோ, அவர்களை நினைவு செய்கின்றார்கள். அவர்களின் நினைவு சின்னம் அமைக் கின்றார்கள். அவர்கள் என்ன செய்தார்கள். சிலர் கல்லூரி திறக்கின்றார்கள், தானம், புண்ணியம் அதிகமாக செய் கின்றார்கள். வேறு என்ன செய்வார்கள்? ஆங்கிலேயரிடம் இருந்து இராஜ்யத்தினைப் பெற்று காங்கிரஸ்காரர்கள் இராஜ்யம் செய்தார்கள். பாபா கூறுகின்றார் இது கானல்நீர் போன்ற இராஜ்யம். எவ்வளவு தான் சுகம் இருந்தாலும், கானல் நீர் போன்றது, வெளி ஆடம்பரம் நிறைய இருக்கின்றது. இந்த விஞ்ஞானம் கூட 100 ஆண்டுகளுக்கு உட்பட்டது. இந்த தாதா (பிரம்மா பாபா) மும்பையில் தொழில் செய்த காலத்தில் மின்சாரம், தொலைபேசி எதுவுமேயில்லை. இப்போது விஞ்ஞானம் மிகவும் அதிசயங்களை செய்துள்ளது. இனி சிறிது காலம் தான் உள்ளது. விஞ்ஞானத்தின் பொலிவு 100 ஆண்டுகளுக்குள் தான் இருக்கும். சத்தியயுகத்தில் 100 ஆண்டுகளுக்குள் என்ன செய்வார்கள் என்ற கூறமுடியாது. இங்குள்ளவை அனைத்து சக்திகளும் அங்கு இருக்கும், இங்கிருந்து எடுத்து செல்கின்றீர்கள். ஆடாத, அசைக்க முடியாத சுகம் சாந்தியான இராஜ்யம் செய்வதற்கான சக்தி கிடைக் கின்றது. ஆதலால் படிப்பில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். மிகுந்த முயற்சி செய்ய வேண்டும்.

உங்களுக்குத் தெரியும் தாய், தந்தையின் மூலம் அளவற்ற சுகம் கிடைக்கின்றது. ஆனால் போகப்போக கை விட்டுவிடுகின்றார்கள் கேட்பது கூடயில்லை. ஆதலால் தனது தொழில் காரியங்களில் மூழ்கி விடுகின்றார்கள் அவ்வளவு தான் முடிந்துவிட்டது. யார் அடைந்தார்களோ அவர்களே அடைவார்கள். பாபா கையை விட்டுவிட்டால் மாயை முழுமையாக விழுங்கிவிடுகின்றது. யானையை மாயை என்ற முதலை விழுங்கிவிடுகின்றது. இவ்வாறு நடைபெறும். நீங்கள் பார்க்கின்றீர்கள். மிகமிக நல்லவர்கள், உயர்ந்த அழைப்பு கொடுத்தவர்கள், கிளை நிலையங்கள் திறந்தவர்கள் கூட படிப்பை விட்டுவிடுகின்றார்கள். அவர்களின் அதிர்ஷ்டம் நாடகத்தின்படி அவ்வளவு தான் இருக் கின்றது. ஆதலால் அவர்களின் நிலை என்னவாகும்? மாயை முழுமையாக விழுங்கி விடுகின்றது. எத்தனை பேர் இறந்து விட்டார்கள். அதிகமாக பல காட்சிகளைப் பார்த்தவர்கள், ஆன்மீக விளையாட்டு விளையாடியவர்கள், இன்று காணவில்லை. ஆதலால் காட்சிகளைக் காண வேண்டும் என்ற ஆசை இருக்கக்கூடாது. ஆசைகள் வைத்தால் தடைகள் வருகின்றது. மாயை என்ற பூதம் பிரவேசம் ஆகிவிடு கின்றது. எத்தனை காட்சிகளைப் பார்த்தார்கள். 5-7 நாட்கள் காட்சிகளைக் கண்டு குழந்தை போன்று பாகம் நடித்தார்கள். மகாராணியாக ஆனது போல் இருந்த அம்மாதிரியான குழந்தைகள் கூட இன்றில்லை. இவற்றில் நன்மை எதுவுமேயில்லை. ஞானத்தில் பரிபக்குவமான குழந்தைகள் தான் நிலையாக இருக்க முடியும். ஒருபோதும் தியானத்தில் காட்சிகளைப் பார்க்க வேண்டும் என்று ஆசைகள் இருக்கக்கூடாது. பாபா என்ன பாடம் கற்றுத் தருகின்றாரோ அதையே தாரணை செய்ய வேண்டும். எந்தளவு படிக்கின்றார்களோ, அந்தளவு உயர்ந்த பதவி கிடைக்கும். குழந்தைகள் கவனத்தில் வைக்க வேண்டும். பரமபிதா பரமாத்மா பாடம் கற்றுத் தருகின்றார். நாம் படித்து 21 பிறவிகளுக்கு உயர்ந்த பதவியை அடைகின்றோம். பின்னர் நாம் தான் பூஜ்ஜிய நிலையிலிருந்து பூஜாரியாக

ஆகின்றோம். யார் பிராமண குலத்தினை சேர்ந்தவர்களோ அவர்கள் தான் இம்மாதிரியாக கூறமுடியும். வேறு யாரும் இம்மாதிரியாக கூறமுடியாது. பாரதத்திற்காகவே விளையாட்டு அமைக்கப் பட்டுள்ளது. நீங்கள் கூறுவீர்கள் நாம் பூஜ்ஜிய தேவி, தேவதையாக ஆகின்றோம். பூஜைக் குரியவர்களே 84 பிறவிகள் எடுத்து தாழ்ந்து விடுகின்றார்கள். இவை அனைத்துமே குழந்தைகளுக்குத் தெரியும். சிவபாபாவின் தொழில் என்னவென்று கூடத் தெரியும். ஒரு வினாடியில் நிச்சயம் ஏற்பட்டது என்றால் ஆஸ்தியை அடைய முடியும். ஈஸ்வரனுடையவராக ஆகிவிட்டு ஈஸ்வரனை விவகாரத்து செய்துவிடுவது ஆச்சரியமான விஷயமல்லவா? பள்ளியில் கூட படிக்கின்றார்கள், நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்தால் நல்ல குழந்தை என்று கூறுவார்கள். மாணவன் தன்னைத்தானே நல்லவர் என்று நினைப்பான். அப்பா, ஆசிரியர் கூறுவார்கள் நல்ல பையன் என்று. இவர் கூட அப்பா, ஆசிரியர், குருவாக உள்ளார். அப்பாவாக உள்ளார், பின்னர் ஆசிரியராக ஆகி பாடம் கற்பிக்கின்றார், பின்னர் கூடவே அழைத்து செல்கின்றார். பாபா கூறுகின்றார் நாம் ஒன்றாகச் செல்வோம். உங்களுடைய ஜோதி அணைந்து விட்டது மீண்டும் சுடர்விடுகின்றது. நம்முடைய ஜோதி சதா சுடர்விட்டு எரிகின்றது. அனைத்தும் ஆத்மாவின் விஷயங்கள். நாம் ஆத்மா அசரீரி, அசரீரியாகி செல்ல வேண்டும். நமது விளையாட்டு முடிவடைந்து மீண்டும் ஆரம்பமாகின்றது. இவைகளை குழந்தைகள் புத்தியில் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் தாய், தந்தை... உங்களுடைய படிப்பின் மூலமாக கருணைக்காட்டி எங்களுக்கு அளவற்ற சுகத்தைக் கொடுக்கின்றீர்கள். அப்படிப்பட்ட தாய், தந்தையை ஒருபோதும் மறக்கக்கூடாது. பாபாவை விட்டு செல்லக்கூடாது. பாபா கூறுகின்றார், இப்படிப்பட்ட தாய், தந்தை, பாப்தாதாவை யார் மிகவும் நினைவு செய்கின்றார்களோ அவர்களுக்கு ஆஸ்தியை கொடுக்கின்றார். கடிதம் எழுதிக் கொண்டே யிருந்தால் பாபா புரிந்து கொள்வார், நினைவு செய்கின்றனர் என்று. பாபா எழுத வேண்டிய அவசியமில்லை. பாபா தினந்தோறும் முரளி அனுப்புகின்றார். அன்பு நினைவுகளைக் கொடுக்கின்றார். அவர் என்றும் சுடர்விடும் ஜோதியாக இருக்கின்றார். குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். அவசியம் கடிதம் எழுதிக் சொண்டேயிருக்க வேண்டும். அருகாமையில் உள்ள குழந்தைகளைப் பற்றி கவலையில்லை. சஞ்சலப்படும் குழந்தைகளுக்கு எச்சரிக்கை கொடுக்கின்றார். படிக்க வேண்டும் என்பதை மறந்துவிட வேண்டாம். அனைத்து செய்திகளும் பாபாவிடம் வருகின்றது. பதிவேட்டில் பெயர் எழுதப்பட்டுள்ளது ஆனால் இந்த குழந்தை ஏன் வருவதில்லை? தினமும் வரவில்லையெனில் இறந்து விட்டதாக புரிந்து கொள்ளப்படுகிறது. பாபா கேட்கின்றார், குறிப்பிட்ட குழந்தை பற்றிய விபரம் ஏதும் வர வில்லையா? இன்னார் வருவதில்லை. சந்தேக புத்தி உள்ளவர்களாக ஆகிவிட்டார். நல்லது. சிறிது காலம் போன பிறகு நிச்சயபுத்தி உள்ளவர்களாக ஆகிவிடுவார்கள். நல்லது.

இனிமையிலும், இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும், தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கங்களும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) வெற்றி மாலையில் வருவதற்கான தைரியம் வைக்க வேண்டும். அனைவருக்கும் சுகத்தினைக் கொடுக்க வேண்டும். நினைவு செய்ய தகுதியானவர்களாக ஆகவேண்டும்.

(2) உண்மையான மாணவர்களாக ஆகி, அப்பா, ஆசிரியர் பெயரை புகழ் பெறச் செய்ய வேண்டும். ஒருபோதும் காமம், கோபம் என்ற பூதங்களுக்கு வசமாகி தவறான காரியங்களைச் செய்யக்கூடாது.

வரதானம் : செய்பவர் செய்விப்பரின் நினைவு மூலம் தடைகள் என்ற விதையை சமாப்தி செய்யக்கூடிய சக்திசாலியான ஆத்மா ஆகுக.

அனைத்து விதமான தடைகளுக்கான விதை இரண்டு வார்த்தைகளில் இருக்கிறது - 1. அபிமானம் 2. அவமானம். சேவை செய்யும் இடத்தில் அல்லது நான் செய்தேன், என்னால் தான் செய்ய முடியும் என்ற அபிமானம் வருகிறது, அதனால் என்னை ஏன் முன்னால் வைக்க வில்லை? எனக்கு ஏன் இதை சொல்லவில்லை? இந்த என்னுடையது என்பது அவமானத்திற்கானதாக இருக்கிறது. இந்தவொரு பாவணை வித விதமான ரூபத்தில் தடைகளாக வந்துவிடுகிறது. கடவுளின் உதவியாளர்களாக இருக்கிறோம், செய்பவர் செய்விப்பவர் பாபாவாக இருக்கிறார் என்றால் அபிமானம் எங்கிருந்து வருகிறது, எங்கு அவமானம் ஏற்பட்டது, ஆகையால் இணைந்த ரூபத்தின் நினைவு மூலம் சக்திசாலியான ஆத்மா ஆகிவிட்டால், தடைகளின் விதை சதா காலத்திற்காக முடிந்து போய்விடும்.

சுலோகன்: ஞான சொரூபம் ஆக வேண்டுமென்றால் பாபா மற்றும் படிப்பில் சமமான அன்பு இருக்கும்.